# கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான ரஸலினுடைய அணுமுறை: ஓர் பகுப்பாய்வு

**Sivakumar. Nirosan**

Assistant Lecturer, Dept of Philosophy, Faculty of Arts, University of Jaffna.
ssnirosan@yahoo.com

**ABSTRACT:** இவ் ஆய்வுக் கட்டுரையானது கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான ரஸலினுடைய அணுகுமுறைகள் சமகால மெய்யியற் சிந்தனைகளில் ஏற்படுத்திய தாக்கத்தினைப் பகுப்பாய்வு செய்வதாக அமைகின்றது. எமது புறவுலக அறிவு தொடர்பாக மெய்யியலாளர்களால் முன்வைக்கப்பட்ட பல்வேறு சிந்தனைகளுள் கருத்துமுதல் வாதமும் ஒன்றாகும். இக் கருத்துமுதல்வாத சிந்தனையானது 19ம் நூற்றாண்டின் ஆரம்பம் தொடக்கம் ஐரோப்பா முழுவதும் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. இமானுவெல் கான்ட் (Immanuel Kant) பிட்சே, ஸ்கெல்லிங், ஹெகல், பிராட்லி போன்ற மெய்யியலாளர்களால் இக்கருத்துமுதல் வாதம் வளர்த்தெடுக்கப்பட்டது. பிராட்லியினுடைய எழுத்துக்களால் கவரப்பட்ட பேர்ட்ண்ட் ரஸல் ஆரம்பத்தில் கருத்துமுதல் வாதியாக விளங்கியிருந்தாலும் பின்னர் ஜீ.ஈ.மூரினுடைய வழிகாட்டலினால் கருத்துமுதல் வாதத்திற்கு எதிராக கிளர்ந்தெழுந்தார். ரஸலினுடைய கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான புரட்சியானது மேலைத்தேய மெய்யியல் வரலாற்றில் பாரிய திருப்புமுனையாக அமைந்தது. கருத்துமுதல் வாதத்திற்கு எதிராக ரஸல் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தனது வாதங்களை முன்வைத்தார். கருத்துமுதல் வாதத்திற்கு மாறாக பொருளின் இருப்புக் குறித்த தெளிவான விளங்கங்களை முன்வைத்தார். பொதுப்புத்தி, பொதுப்பொருட்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான தனது வாதங்களை முன்வைத்ததோடு, தனது இந்த நிலைப்பாட்டினை தனது சிந்தனைகள் அனைத்திலும் வெளிப்படுத்தியிருந்தார். அவரது தர்க்க அணுவாதம், இலட்சிய மொழி ஆகிய சிந்தனைகள் இதற்குச் சான்றுபகர்கின்றன. ரஸலினுடைய சிந்தனைகளின் விளைவாக மேலைத்தேய மெய்யியலில் பகுப்பாய்வு மெய்யியல், கண்ட மெய்யியல் எனும் இருபெரும் பிரிவுகள் தோற்றம் பெற்றன. அதுமாத்திரமன்றி ரஸலினுடைய கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான சிந்தனைகள் பிற்பட தோற்றம் பெற்ற தர்க்கப் புலனெறிவாதம் போன்ற பல்வேறு சிந்தனைப் பள்ளிகளுக்கும், விக்கின்ஸ்ரைன், காள்பொப்பர், ஏ.ஜே.அயர் போன்ற பல மெய்யியலாளர்களின் சிந்தனைகளுக்கும் முன்னோட்டமான சிந்தனைகளாக அமைந்திருந்தன. எனவே மேலைத்தேய மெய்யியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்ற கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான ரஸலினுடைய அணுகுமுறைகளையும், அதற்கு எதிரான விமர்சனங்களையும், பிற்பட்ட வளர்ச்சியையும் பகுப்பாய்வு செய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது. இவ் ஆய்விற்குத் தேவையான தரவுகள் ரஸலினுடைய பிரதான நூல்கள், பருவ இதழ்களில் வெளியான கட்டுரைகள், இணையத்தளக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன. மேலும் இவ் ஆய்வானது விபரணமுறை, பகுப்பாய்வுமுறை, விமர்சனமுறை என்பவற்றின் துணைகொண்ட மேற்கொள்ளப்படுகின்றது.

**Keywords:** கருத்துமுதல்வாதம், பொதுப்புத்தி, தர்க்க அணுவாதம், இலட்சிய மொழி, தர்க்கப் புலனெறிவாதம்

## 1. அறிமுகம்:

கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான ரஸலினுடைய அணுகுமுறைகள் சமகால மெய்யியற் சிந்தனைகளில் ஏற்படுத்திய தாக்கத்தினைப் பகுப்பாய்வு செய்வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் பிரதான நோக்கமாகும். பேர்ட்டண்ட் ரஸலினது கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான கிளர்ச்சியானது மேலைத்தேய மெய்யியல் வரலாற்றில் பகுப்பாய்வு மெய்யியல், கண்ட மெய்யியல் எனும் இரு பெரும் பிரிவுகளைத் தோற்றுவித்தது. ரஸல் கருத்துமுதல் வாதத்திற்கு எதிராக முன்வைத்த வாதங்கள் கருத்துமுதல் வாதத்தின் ஆதிக்கத்தை குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியடையச் செய்ததோடு சமகாலத்தில் தோற்றம் பெற்றுள்ள பல்வேறு மெய்யியற் சிந்தனைப் பள்ளிகளுக்கும், மெய்யியல் அறிஞர்களுக்கும் பல முன்னோட்டமான கருத்துக்களைக் கொண்டிருந்தன. எனினும் ரஸலினுடைய வாதங்களிற்கு எதிராக விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த வகையில் இவ் ஆய்வானது ரஸலினுடைய கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான வாதங்களை தெளிவுபடுத்துவதோடு; அவற்றிற்கு எதிராக எழுந்த விமர்சனங்களையும், அவற்றின் பிற்பட்ட வளர்ச்சியையும் மதிப்பீடு செய்வதாக அமைகின்றது.

## 2. ஆய்வின் கருதுகோள்:

ரஸலினுடைய கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான அணுகுமுறையானது பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்த பொழுதிலும், சமகால மெய்யியல் சிந்தனைப் பள்ளிகள் மற்றும் சமகால மெய்யியலாளர்களது சிந்தனைகளிலும் பெரிதும் செல்வாக்குச் செலுத்தியிருந்தது.

### 3. ஆய்வு முறையியலும் தரவு சேகரித்தலும்:

இவ் ஆய்விற்குத் தேவையான தரவுகள் ரஸலினுடைய பிரதான நூல்கள், பருவ இதழ்களில் வெளியான கட்டுரைகள், இணையத்தளக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன. மேலும் இவ் ஆய்வானது விபரணமுறை, பகுப்பாய்வுமுறை, விமர்சனமுறை என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 4. பகுப்பாய்வு:

கருத்து முதல் வாதமானது நாம் அறிவது பொருட்களை அல்ல எண்ணங்கள் அல்லது கருத்துக்களையே என வாதிடுகின்ற ஒரு சிந்தனைப் போக்காகும். அது இவ்வுலகப் பொருட்களுக்கோ அல்லது யதார்த்தத்திற்கோ முதன்மையளிக்காது எண்ணங்கள் அல்லது கருத்துக்களுக்கே முதன்மையளிக்கின்றது. இக்கருத்து முதல்வாதமானது கிரேக்க காலம் முதலே இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. பிளேட்டோ எண்ணங்களின் உலகு குறித்து குறிப்பிடுகின்றார். ''நாம் காணும் பொருட்கள் எண்ணங்களின் பிரதிகளே என்றும், அவற்றின் முழுமையான வடிவம் எண்ணங்களின் உலகிலே உள்ளது என்றும்'' குறிப்பிடுகின்றார். நவீன காலத்தில் லொக், பாக்ளி, கியூம் போன்ற அனுபவவாதிகள் எண்ணங்களின் முதன்மை குறித்து குறிப்பிடுகின்றனர். எது எவ்வாறிருப்பினும் ஜேர்மனிய மெய்யியலாளரான இமானுவெல் கான்ட் (Immanuel Kant) என்பவருடைய சிந்தனைகளினைத் தொடர்ந்து 19ம் நூற்றாண்டின் ஆரம்பம் தொடக்கம் அந்நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஜேர்மனிய கருத்துமுதல் வாதம் ஐரோப்பா முழுவதும் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. ஆரம்பத்தில் பேர்ட்டண்ட் ரஸலும், ஜி.ஈ.மூரும் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதி கேம்பிறிச் பல்கலைக் கழகத்தில் கற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் பிரித்தானிய கருத்துமுதல் வாதத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தனர். மெக்ட்டாகார்ட், ஹெகல், பிராட்லி ஆகியோரின் எழுத்துக்களால் கவரப்பட்ட ரஸல் கருத்துமுதல் வாதத்தினை ஆதரித்தார். இதனை ரஸல் தனது 'எனது மெய்யியல் வளர்ச்சி' (My Philosophical Development) எனும் நூலில் ''என்னுடைய இளம் வயதில் பிராட்லியினுடைய சிந்தனைகளுக்கு ஆட்பட்டிருந்த காலத்தில் ஒரு ஹெகலிய கருத்துமுதல் வாதியாக விளங்கினேன்'' எனக் குறிப்பிடுகின்றார்.

எனினும் பிற்பட்ட காலப்பகுதியில் மூர் றினிற்றி கல்லூரியில் எழுதிய ஆய்வுக் கட்டுரையின் ஒரு பகுதி F.H.பிராட்லியினுடைய தீர்ப்புப் பற்றிய கோட்பாட்டினை (Theory of Judgement) விமர்சிப்பதாக அமைந்தது. அவரது இவ் ஆய்வானது அவரை மாத்திரமன்றி ரஸலையும் கருத்துமுதல் வாதத்திற்கு எதிராக கிளர்ந்தெளச் செய்தது. அவ் ஆய்வுக் கட்டுரையின் குறித்த பகுதியானது 'தீர்ப்புக்களின் இயல்பு' (The Nature of Judgement) என்ற பெயரில் 1899ல் வெளியிடப்பட்டது. இது குறித்து ரஸல் தனது சுயசரிதையில் ''இன்று பிளேட்டோனிய அணுவாதம் (Plotonic Atomism) என அறியப்படுகின்ற யதார்த்தவாத எண்ணக்கருவை பாதுகாக்கும் வகையில் வெளிவந்த முதலாவது வெளியீடு இது'' எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறாக மூரினது (G.E.Moore) வழிகாட்டலினால் ரஸல் பிளேட்டோனிய யதார்த்த வாதத்தினால் கவரப்பட்டதோடு கருத்துமுதல் வாதத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார். இதனை ரஸல் தன்னுடைய 'எனது மெய்யியல் வளர்ச்சி' (My Philosophical Development) எனும் நூலில் ''1898ல் நானும் மூரும் கான்டிற்கும், ஹெகலிற்கும் எதிராகக் கிளர்ந்தோம்'' [2] எனக் குறிப்பிடுகின்றார். அது மாத்திரமன்றி மூரே தன்னை வழிநடத்தியதாகவும், நான் அவருடைய பாதச் சுவடுகளை நெருக்கமாகப் பின்பற்றிச் சென்றேன் எனவும் அக்கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.[3]

ரஸல் ஆரம்பத்தில் தனது 'Meta-Geometry' என்ற கட்டுரையில் கருத்துமுதல் வாதத்தைப் பேணும் வகையில் கருத்துக்களைக் கட்டமைத்தார். மிகக் குறுகிய காலத்தில் அதாவது 1897ல் அக் கட்டுரையின் மீள் வெளியீட்டில் பிற்பட்ட காலத்தில் அவர் கருத்துமுதல் வாதத்தினை கைவிடுவதற்கான முன்னோட்டமான கருத்துக்களை கொண்ட வகையில் ஒரு சிறு கட்டுரை ஒன்றினை எழுதியிருந்தார். அவ் மீள் வெளியீட்டிற்கு 'Seems, Madam? Nay, it is' என

தலைப்பிடப்பட்டிருந்ததோடு,McTaggart, Bradley ஆகியோரால் வளர்த்தெடுக்கப்பட்ட பூரண அல்லது ஒருமைக் கருத்துமுதல் வாதத்தின் ''உணர்ச்சிசார் பெறுமானம்'' குறித்த விமர்சன விவாதத்தையும் உள்ளடக்கியிருந்தது. பூரண கருத்துமுதல் வாதமானது அதனை ஆதரிப்பவர்களுக்கு இசைவினையும், திருப்தியினையும் கொடுப்பதில் திடநம்பிக்கைக்குரியதாக எடுத்தாளப்பட்டது. அதனுடைய இயல்பில் அது காலத்திற்கு உட்படாதது.

திடநம்பிக்கைக் கொள்கை (Optimism) எதிர்காலம் குறித்த எமது எதிர்பார்ப்புக்களை கவனத்திற் கொள்வதாகவும், முழுமை (Absolute) என்பது காலத்திற்கு உட்படாததுமாக இருந்தால் பூரண கருத்துமுதல்வாதிகள் தமது தர்க்க முரண்பாடுகளுக்கு திடநம்பிக்கைக் கொள்கையினை ஆதாரமாகக் கொள்ள முடியாது. மரணத்தின் பின்னான வாழ்வு குறித்த நம்பிக்கை போன்ற மனித நம்பிக்கைகளின் நோக்கங்கள் எதிர்கால நிகழ்வின் பகுதியாக இருக்கின்றன. அது எப்படி ஒருவருக்கு சாத்தியமான இசைவினையும், திருப்தியையும் கொடுக்க முடியும்? பொருளையும் காலத்தையும் உள்ளடக்குகின்ற எந்தவொரு யதார்த்தத்துடனும், தொடர்பினை கொண்டிராத ஒரு வழியில் (பௌதீக அதீதமான ஒன்றாக) முழுமை என்பது வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. ரஸலினுடைய கருத்துப்படி முழுமை அல்லது பூரணத்துவம் என்பது ''உலகத் தோற்றப்பாட்டினை எந்தவொரு முரண்பாடும் இன்றி வலிதானதாக மாற்றுகின்ற தனியான அனுமானத்திலிருந்து பெறப்படுகின்ற வெறுமையான பண்பு'' எனக் குறிப்பிடுகின்றார். (An empty abstraction, from which no single inference can be validly made as to the world of appearance)[4]

மெய்யியலில் ஆதிக்கம் செலுத்தி வந்த கருத்துமுதல் வாத சிந்தனைகளினை ரஸல் கடுமையாக விமர்சித்தார்.

1. இந்த மேசை உண்மையானதா?
2. இது எவ்வகையான பொருள்?

போன்ற வினாக்களில் முதலாவது வினாவிற்கு கருத்துமுதல் வாதிகளும் ரஸலும் உண்மையானது எனப் பதிலளித்தாலும் இரண்டாவது வினாவுக்கான விடையில் இருவரும் வேறுபடுகின்றனர். கருத்துமுதல் வாதிகள் மேசை என்பது இறைவனது மனதிலுள்ள எண்ணங்களின் தொகுப்பு எனக் கருதினார். ஆனால் ரஸல் மேசை சடப்பொருட்களின் இணைவினால் உருவாக்கப்பட்ட பௌதீகப் பொருள் எனக் கருதினார்.[5] எனினும் இவர்களுக்கிடையில் புலன் தரவு குறித்த சில கருத்துக்களில் கருத்துடன்பாடு காணப்படுகின்றது. புலன்தரவு என்பது கற்பனை, கனவு, ஞாபகம் என்பவற்றுடன் தொடர்பற்றது எனவும், பொருட்களின் இயல்பு எம்மை புலன் தரவை பெற்றுக் கொள்ள வழிவகுக்கின்றது எனவும் ஏற்றுக் கொண்டனர்.

**5. பொருளின் இருப்புக் குறித்த ரஸலினுடைய விளக்கம்:**

ரஸல் பௌதீகப் பொருட்களின் இருப்பினை நிச்சயமாக நிறுவமுடியும் என சிந்திக்கவில்லை. எது எவ்வாறிருப்பினும் அதனை நிறுவுவதற்குரிய வழிமுறைகளை விருத்தி செய்வதில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். அந்த வகையில் ரஸல்

- ✓ பௌதீகப் பொருட்கள் இல்லை என ஊகிப்பதற்கு எந்தவொரு நியாயமும் இல்லை எனவும்

- ✓ 'பௌதீகப் பொருட்கள் உண்டு எனும்' கருதுகோள் 'பௌதீகப் பொருட்கள் இல்லை. புலன்தரவுகளே உண்டு' எனும் கருதுகோளைவிட எளிமையானதும், சிறந்ததும் ஆகும் எனவும் வாதிட்டார்.[6]

மேலும் ரஸல் டேக்காட்டினுடைய முறையான ஐயம் என்ற முறையினை ஆதரித்திருந்த பொழுதிலும் அவரது அடிப்படையான வாதம் பௌதீகப் பொருட்கள் காட்டீசிய ஐயவாதத்தினுள் உள்வாங்கப்பட முடியாது என்பதாகவே இருந்தது. மேலும் புலன் தரவுகளை விட சடப்பொருட்கள் எளிமையான கருதுகோள் என்பதனை பின்வரும் மூன்று உதாரணங்கள் மூலம் விவாதிக்கின்றார்.

1. ஒரு பூனை ஒரு அறையினூடாக சென்று கொண்டிருக்கின்றது.
2. ஒரு பூனை பசியாக இருக்கின்றது.

3. மனிதர்கள் தொடர்பாடிக் கொண்டிருக்கின்றனர்.[7]

கருத்துமுதல் வாதம் குறிப்பிடுவது போன்று புலன்தரவுகளே உண்மையானவை; அவற்றைப் பெற்றுக் கொள்ளாதவிடத்து பொருட்கள் இருப்புடையவை அல்ல என நாம் கருதுவோமேயானால் பின்வரும் நேர்வினை எவ்வாறு விளக்கமுடியும். "ஒரு நிமிடத்திற்கு முன்னர் நான் பார்க்கும் பொழுது அந்தப் பூனை எனது அறையின் ஒரு பகுதியாக இருந்தது. இப்பொழுது நான் பார்க்கும் பொழுது அது எனது அறைக்கு வெளியே உள்ளது. இத்தகைய பூனையின் அசைவினை நாம் எவ்வாறு விளக்க முடியும்?" என ரஸல் வினவுகின்றார்.

**6. கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான ரஸலினுடைய வாதங்கள்:**

கருத்துமுதல் வாதத்திற்கு எதிராக ரஸல் இரண்டு அடிப்படை வாதங்களை முன்வைத்தார்.

1. முதலாவது வாதம்:- பொதுப்புத்தியை (Common sense) அடிப்படையாகக் கொண்ட வாதம்.

2. இரண்டாவது வாதம்:- பொதுப் பொருட்களை (Public Objects) அடிப்படையாகக் கொண்ட வாதம்.

பாக்ளி சில இருப்புடையனவாய் இருப்பதற்கு அவை புலன்தரவுகளால் அறிந்துகொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார். முதலாவதுவாதத்தில் நாம் ஏன் பாக்ளியினுடைய நிராகரிக்க வேண்டும் என்பதற்கு ரஸல் பின்வரும் சந்தர்ப்பத்தினை எடுத்துக்காட்டுகின்றார்.

$P_1$ :- நாம் பொருள்முதல் வாத மற்றும் கருத்துமுதல் வாத நிலைப்பாடுகளில் இருந்து மேசையினைப் பார்க்கும் பொழுது அது இருப்புடையது.

$P_2$:- இப்பொழுது நாம் சில வேளைகளில் அந்த மேசையை மேசை விரிப்புத் துணியைக் கொண்டு மூடினால் எம்மால் மேசையைப் பார்க்க முடியாது. மேசையின் வடிவத்திலிருக்கும் துணியை மாத்திரமே பார்க்க முடியும்.

$P_3$ :- புலக்காட்சி இருப்பிற்கு அவசியமானது எனில் கருத்துமுதல் வாதத்தின் படி மேசை விரிப்பினால் மூடப்பட்ட அந்த மேசை இருப்புடையதல்ல. ஏனெனில் அது புலன்களால் அறியப்படவில்லை. மேசை விரிப்பு மாத்திரமே அறியப்படுகின்றது.

$P_4$:- மேற்குறித்த கருத்து பொதுப்புத்திக்கு குறைபாடுடையதும், தவறானதும் ஆகும். நிச்சயமாக அந்த மேசை அங்கேதான் இருக்கின்றது.

C :-எனவே கருத்துமுதல் வாதம் குறைபாடுடையது அதனை நிராகரிக்க வேண்டும்.[8]

முதலாவது வாதத்தில் கருத்துமுதல் வாத சிந்தனை பொதுப்புத்திக்கு முரணாக இருப்பதனால் அது தவறானது என்றும் அதனை நிராகரிக்க வேண்டும் என்றும் கூறிய ரஸல் இரண்டாவது வாதத்தில் நாம் சிலவற்றை முற்றாக நிராகரிப்பதற்கும், அவற்றை வலிதற்றவை எனக் கூறுவதற்கும் அவை எமது பொதுப்புத்தியுடன் முரண்படுகின்றன என்பது மாத்திரம் காரணமாக இருக்க முடியாது. பொதுப்புத்தி குறித்த நிலைப்பாட்டின்படி நாம் எல்லாவற்றையும் சரியாக வரைவு செய்து கொள்ள வேண்டும் எனின் நாம் மெய்யியலாளர்களாக இருப்பதனை விட பரிசோதனை உளவியலாளர்களாக (Experimental psychologist) இருப்பதே சிறந்தது. எனவே புறவுலகப் பொருட்களின் இருப்புக்கு வேறொரு வாதமும் தேவைப்பாடுடையதாக உள்ளது. அந்த வகையில் ரஸல் பொதுப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு மற்றுமொரு சந்தர்ப்பத்தினை எடுத்துக்காட்டுகின்றார்.

பத்து நபர்கள் ஒரு மேசையைச் சுற்றிவர உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர். மேசையைப் பற்றி புலன் தரவு ஒவ்வொரு நபருக்கும் தனியானது. அதாவது ஒவ்வொரு நபரும் அந்த மேசை குறித்து வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருப்பர். ஏனெனில் அவர்கள் மேசையின் ஒவ்வொரு கோணங்களில் உள்ளனர். எனவே இங்கு கருத்துமுதல் வாத நிலைப்பாட்டின் படி பத்து வேறுபட்ட மேசைகள் இருப்பதாக கருதப்படும். ஏனெனில் எண்ணங்கள் அல்லது கருத்துக்கள் குறிப்பிட்ட பொருட்களாக இருப்பதுடன், அவை எந்தவொரு புறவுலகப் பொருட்களாலும்

ஏற்படுத்தப்படுவதில்லை. இதன்படி பத்து வேறுபட்ட கருத்துக்கள் பத்து வேறுபட்ட பொருட்களாகக் கருதப்படும்.

ஆனால் அது தவறானது. நிச்சயமாக ஒவ்வொருவரும் ஒரே மேசையையே பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அங்கு ஒரு வெளியார்ந்த மேசைதான் உள்ளது. அதனை பத்து நபர்கள் வெவ்வேறு கோணங்களில் இருந்து அறிந்து கொள்கின்றனர். பொதுவான பொருட்கள் இருக்க முடியும் என்பதற்கு இதுவே வழியாகும். எனவே கருத்துமுதல் வாதம் பொதுவான பொருட்கள் குறித்து சாத்தியமான நிரூபனம் எதனையும் எமக்குத் தரவில்லை. எனவே இது தவறானதாக இருக்க வேண்டும் என்பதோடு சடப்பொருட்கள் உண்டு என்கின்றார்.[9]

ரஸலினுடைய கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான சிந்தனைகள் தர்க்க அணுவாதம், இலட்சிய மொழி என்பவை குறித்த அவரது கருத்துக்களிலும் பிரதிபலித்திருந்தன.

**7. தர்க்க அணுவாதமும் இலட்சிய மொழியும்:**

ரஸலினுடைய கருத்துமுதல்வாதத்திற்கு எதிரான சிந்தனைகள் அவருடைய தர்கக அணுவாத சிந்தனைகளிலும் அதன் வழி அவர் உருவாக்கிய இலட்சிய மொழியிலும் பிரதிபலித்திருந்தன. ரஸலினுடைய தர்க்க அணுவாதம் இறுதியில் பௌதீகப் பொருட்களின் இருப்பிலே சென்று முடிவடைகின்றது. மொழியைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் கண்டறியப்படும் எளிய நேர்வுகளை ரஸல் அணுக்களாகக் கருதினார். எவ்வாறு இவ்வுலகம் அணுக்களால் ஆனதோ அதே போன்று மொழியில் இடம்பெறும் வாதங்களும் எடுப்புக்களும் அணுக்களால் ஆனவை. அந்த வகையில் ரஸல் நேர்வுகள் குறித்தும் தனது வரையறைகளினை முன்வைக்கின்றார். அவர் நேர்வு என்று குறிப்பிடுவது தனிப்பொருட்களை அல்ல. அதாவது 'சோக்கிரட்டீஸ்' என்பதோ,'பிளேட்டோ' என்பதோ நேர்வுகளாக மாட்டாது. தனிப்பொருட்கள் குறிப்பிட்ட பண்பினை அல்லது உடைமையினைக் அல்லது சில வகையான உறவுகளைக் கொண்டு காணப்படும். இந்நிலையில் பொருட்களை மட்டும் அறிந்திருத்தல் போதியதாக அமையாது. அவை கொண்டுள்ள பண்புகளையும், உறவுகளையும் அறிந்திருத்தல் அவசியமாகின்றது. எனவே நேர்வுகள் என்பது ஒரு பொருளினது பண்பினை அல்லது உடமையினை அல்லது வெவ்வேறு பொருட்களுக்கிடையிலான உறவுகளைக் குறிக்கின்றன.

அணு நேர்வுகளை வெளிப்படுத்துகின்ற எடுப்புக்கள் அணு எடுப்புக்கள் (Atomic propositions) ஆகும். அணு நேர்வுகளோடு தொடர்புடைய அல்லது அணு நேர்வுகளை வெளிப்படுத்துகின்ற அணு எடுப்புக்கள் அவை வெளிப்படுத்தும் நேர்வுகளோடு கொண்டுள்ள தொடர்பின் அடிப்படையில் உண்மையாக அல்லது பொய்யாக அமைகின்றன. அதாவது 'சோக்கிரட்டீஸ் இறந்து விட்டார்' என்று கூறினால், சோக்கிரட்டீஸ் இறந்திருந்தால் அது உண்மையாகின்றது, இறக்காவிட்டால் அது பொய்யாகின்றது.

இவ்வாறாக மொழியினைப் பகுப்பாய்வு செய்த ரஸல் அதன் அடிப்படையில் செயற்கை மொழி ஒன்றினையும் உருவாக்க முனைந்தார். அப் பணியினை கணிதக் குறியீடுகளின் அடிப்படையில் மாறி, மாறிலிகளை அமைத்து மேற்கொண்டார். அதனூடாக அவற்றின் உண்மை, பொய்ப் பெறுமானங்களை இலகுவாகத் துணியலாம் என ரஸல் கருதினார். ரஸல் அணு எடுப்புக்களை P தொடக்கம்Z வரையிலான ஆங்கிலப் பெரிய எழுத்துக்கள் மூலம் குறியிட்டார். இதன் மூலம் மொழியினை அர்த்தமுள்ளதாகவும், தெளிவானதாகவும் பயன்படுத்த முடியும் என ரஸல் நம்பினார்.

அன்றாட மொழியினைப் பகுப்பாய்வு செய்து அதனை நேர்வுகளின் உண்மையான அமைப்பினை வெளிப்படுத்துகின்ற ஓர் சிறந்த மொழியாக மாற்றமுடியும். ரஸல் தன்னுடைய Our Knowledge of the External world என்ற நூலில் "சாதாரண மொழியானது தர்க்க ரீதியானதாக போதுமானதாக இல்லை எனவும், நாம் எமது பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்ய முன்னர் செயற்கை மொழி (Artificial Language) ஒன்றினை உருவாக்க வேண்டும் எனவும்" குறிப்பிடுகின்றார். இவ்வாறு தர்க்க அடிப்படையில் மீள் கட்டுமானம் செய்யப்படும் மொழியினை ரஸல் மெய்யியல் அடிப்படையில் 'தர்க்க ரீதியான முழுமையான மொழி'(Logically Perfect Lamguage) என அழைத்தார். இது நேர்வுக்கும் குறியீட்டுக்கும் இடையிலான அடிப்படை அமைப்பின் ஊடாக உருவாக்கப்பட்ட ஒருவகையான மொழியாகும். "இந்த தர்க்க முழுமையான மொழியில் ஒவ்வொரு தனியான பொருளுக்கும் ஒரு சொல் மாத்திரமே காணப்படும். ஒன்றுக்கு

மேற்பட்ட சொற்கள் காணப்படமாட்டாது. அத்தோடு ஒவ்வொரு சிக்கலான பொருட்கள் அல்லது நேர்வுகளும் பல சொற்களின் இணைவினால் வெளிப்படுத்தப்படும். ஒவ்வொரு எளிய பகுதிக்கும் ஒரு சொல்லை உள்ளடக்குகின்ற எளிய பொருட்களுக்கான சொற்களில் இருந்து இந்த இணைவு பெறப்படுகின்றது. அத்தகைய மொழி ஒரு முழுமையான பகுப்பாய்வாக இருப்பதோடு நேர்வுகளின் தர்க்க அமைப்பு நிராகரிக்கப்பட்டதோ அல்லது நிறுவப்பட்டதோ என்பதனை ஒரே பார்வையில் வெளிப்படுத்தும்''என்றார்.

**8. திறனாய்வு அணுகுமுறை:**

பௌதீக அதீதக் கருத்துக்களையும், சிந்தனைகளையும் மெய்யியலில் இருந்து நீக்குவதனையே ரஸல் தனது நோக்கமாகக் கொண்டிருந்தார். பௌதீக அதீதக் கருத்துக்கள் அனுபவத்திற்கு அப்பாற்பட்டவையாக இருப்பதனால் அவை பகுப்பாய்வு செய்யப்பட முடியாதவை என ரஸல் கருதினார். அவை நிச்சயமான அறிவினைப் பெறுவதற்கு தடையாக அமையும் எனக் கருதினார். ஆனால் பகுப்பாய்வு மெய்யியலுக்கு எதிராக தோற்றம் பெற்ற கண்ட மெய்யியல் சிந்தனைப் பள்ளிகள் பௌதீக அதீதக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டிருந்த தன்மையினையும் காணலாம். கண்ட மெய்யியலின் முக்கியமான பண்பாக பௌதீக அதீதத்தினை ஆதரிக்கின்றமை குறிப்பிடப்படுகின்றது. குறிப்பாக இருப்பியல் வாதிகள் பௌதீத அதீதத்தினை ஆதரித்திருந்த தன்மையினைக் காணலாம். ஹைடேகர் (Heidegger) என்ற இருப்பியல்வாதி தன்னுடைய 'பௌதீக அதீதம் என்றால் என்ன?'(What is Metaphysics) என்ற கட்டுரையில் பௌதீக அதீதத்தினை மெய்யியலின் ஒரு முக்கிய பிரிவாக குறிப்பிடுகின்றார்.

ரஸலினுடைய தர்க்க அணுவாதத்திற்குப் பொது எடுப்புக்கள் பிரச்சினையாக அமைந்தன. உதாரணமாக 'ரகு புத்திசாலி' என்ற எடுப்பில் ரகு என்ற நபரில் புத்திசாலித்தனம் என்ற பண்பினை அவதானிப்பதன் மூலம் உண்மை பொய்யினைத் தீர்மானிக்க முடியும். ஆனால் 'எல்லா காகங்களும் கறுப்பு' போன்ற பொது எடுப்புக்களில் அணு நேர்வுகள் கிடையாது. எனவே அணு நேர்வுகள் சோதிக்கபட வேண்டும் என தர்க்க அணுவாதம் வலியுறுத்துவது பிரச்சினைக்குரியதாகின்றது.

ரஸலினுடைய தர்க்க அணுவாதத்தை ஆரம்பத்தில் அதாவது முந்திய விக்கின்ஸ்ரைன் (Early Wittgenstein) தன்னுடைய 'Tractatus - Logico Philosophicus' என்ற நூலில் எடுத்தாள்கின்றார். எனினும் இவ்விருவரும் தர்க்க அணுவாதத்தைக் கையாண்ட முறை அவர்களது நோக்கு அடிப்படையில் வேறுபடுகின்றது. ரஸலினது தர்க்க அணுவாதத்திற்கும், விக்கின்ஸ்ரைனின் தர்க்க அணுவாதத்திற்கும் இடையில் ஒற்றுமைகள் காணப்படும் அதேவேளை வேறுபாடுகளும் காணப்படவே செய்கின்றன.

ரஸல் தன்னுடைய The Philosophy of Logical Atomism என்ற கட்டுரையில் தர்க்க அணுவாதத்தினை சில எளிய பொருட்களின் இயல்பு மற்றும் நாம் அவற்றை அறிவதற்கான சாத்தியப்பாடு என்ற பொருள் சார்ந்த அடிப்படையில் தெளிவுபடுத்தியிருந்தார். ஆனால் விக்கின்ஸ்ரைன் தன்னுடைய Tractatus - Logico Philosophicus என்ற நூலில் தர்க்க அணுவாதம் குறித்துக் குறிப்பிடும் பொழுது எளிமைகளின் இயல்புகள் குறித்து குறைவாகவே குறிப்பிட்டிருந்ததோடு அதன் அறிவாராட்சியியல் அடிப்படைகளினை முற்றாக நிராகரித்திருந்தார். மேலும் ரஸல் எளிமைகளின் இருப்புக் குறித்த முன்னது ஏதுவான வாதங்களின் சாத்தியப்பாடு குறித்த தனது சந்தேகங்களை ரஸல் வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் விக்கின்ஸ்ரைன் அத்தகைய வாதங்களை முன்வைத்திருந்தார். இந்த வகையில் ரஸலினுடைய தர்க்க அணுவாதத்திற்கும், விக்கின்ஸ்ரைனின் தர்க்க அணுவாதத்திற்கு இடையில் உள்ள மிக முக்கியமான வேறுபாடு யாதெனில் ரஸலினுடைய தர்க்க அணுவாதம் அடிப்படையில் அறிவாராட்சியியல் சார்ந்ததாகவும், விக்கின்ஸ்ரைனின் தர்க்க அணுவாதம் அடிப்படையில் பௌதீக அதீதம் சார்ந்ததாகவும் அமைந்திருந்தன.

ரஸல் தனிப்பொருட் பெயர்கள் என்பதன் கீழ் மனிதர்கள், இடங்கள் போன்றவற்றின் இடுகுறிப் பெயர்களை மட்டுமன்றி சிவப்பு, கடினம் போன்ற குணங்களின் பெயர்களையும், நடத்தல். உண்ணுதல் போன்ற வினைச் சொற்களையும் இன்னும் பலவற்றையும் இணைத்ததோடு பரீட்சயத்தினால் அறியப்படுகின்ற இச்சொற்களில் ஒவ்வொன்றினதும் அர்த்தம் பிறிதெந்தத் தொடர்பும் இன்றி சாத்தியமாவதும், பிறிதெதனையும் அறியாமலேயே அறியப்படுவதும் ஆகும்''

என்றார். இத்தகைய ரஸலினுடைய நிலைப்பாடே விக்கின்ஸ்ரைன் தர்க்க அணுவாதத்தை திறனாய்விற்கு உட்படுத்துவதற்கும் அதனை நிராகரிப்பதற்கும் காரணமானது.

ரஸலினுடைய மேற்குறித்த கருத்துக்கள் மொழியை உலகோடு அல்லது உள்பொருளோடு இணைக்கின்ற காரியம் என்றும் அதன் மூலம் எமது அறிவினை ஐயத்திற்கு இடமில்லாததாக்கும் செயன்முறை என்றும் விக்கின்ஸ்ரைன் வாதிட்டார்.

எது எவ்வாறிருப்பினும் ரஸலினுடைய சிந்தனைகள் சமகால சிந்தனைகள் பலவற்றுக்கும் முன்னோட்டமாக அமைந்திருந்ததோடு அவற்றுக்கான சிறந்த அடித்தளமாகவும் அமைந்திருந்தது. அலன் வூட் (Alan Wood) என்பவர் ரஸலினது மெய்யியல் குறித்து குறிப்பிடுகின்ற பொழுது இன்றைய காலத்தில் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்ற மெய்யியற் சிந்தனைகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ரஸலினுடைய சிந்தனைகளில் பிரதிபலித்திருந்தது எனக் குறிப்பிடுகின்றார். ஜேர்மனிய வரலாற்றாசிரியர்களுள் ஒருவரான 'ரூடோல்ப் மெட்ஸ்' (Rudolf Metz) ரஸலினை "The Only British thinker of the age who enjoys worldwide repute" எனக் குறிப்பிட்டார். ரஸலினுடைய சிந்தனைகள் அன்றைய காலப்பகுதியில் ஜேர்மனி, இத்தாலி, ரஷ்யா போன்ற நாடுகளில் பெரிதும் செல்வாக்குப் பெறவில்லை எனினும் இன்று ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு மொழியிலும் ரஸலினுடைய சிந்தனைகள் எடுத்தாளப்படுகின்றன.

மேலும் Nicholas Griffin என்பவர் தனது The Cambridge Companion to Bertrand Russell என்ற நூலின் அறிமுகத்தில் நவீன மெய்யியலில் ரஸல் பாரிய செல்வாக்கினைச் செலுத்தியிருந்ததாக குறிப்பிடுகின்றார். 20ம் நூற்றாண்டின் பல்வேறுபட்ட பகுப்பாய்வு மெய்யியற் சிந்தனைப் பள்ளிகளும் குறிப்பாக Coherentism, Compatibilism, Contextualism, Deflationism, Direct realism, Incompatibilism, Externalism, Functionalism, Internalism, Ligical atomism, Logical positivism, Neopragmatism, Naturalism, Non- Cognitivism, Ordinary language philosophy, Particularism, Physicalism, Verificationism போன்ற பல சிந்தனைப் பள்ளிகளின் தோற்றத்தில் ரஸலினுடைய மெய்யியற் சிந்தனைகள் பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளன.

முந்திய விக்கின்ஸ்ரைனின் சிந்தனைகளில் ரஸலினுடைய சிந்தனைகள் பெரிதும் செல்வாக்குச் செலுத்தியிருந்தன. குறிப்பாக முந்திய விக்கின்ஸ்ரைனின் 'Tractatus - Logico Philosophicus' என்ற நூலின் உருவாக்கத்தில் ரஸலினுடைய சிந்தனைகள் பெரும்பங்கு வகித்தன. முந்திய விக்கின்ஸ்ரைனின் கணிதவியல் சிந்தனைகளுக்கான அடிப்படைகளை ரஸலினுடைய Principles of Mathematics வழங்கியது. இந்நூலே இயந்திர பொறியியலில் மீது ஆர்வம் கொண்டிருந்த விக்கின்ஸ்ரைனை மெய்யியல் மீது ஆர்வம் கொள்ளவைத்தது. இந்நூலே விக்கின்ஸ்ரைனின் மெய்யியல் வளர்ச்சிக்கும், மெய்யியல் ஈடுபாட்டின் தொடக்கத்திற்குமான அடிப்படையாக அமைந்தது.

ரஸலினுடைய சிந்தனைகளின் பிற்பட்ட வளர்ச்சியை முக்கியமாக நாம் தர்க்கப் புலனெறிவாத (Logical Positivism) சிந்தனைகளில் கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது. ரஸலினுடைய, மெய்யியலின் பணி உலகைப் பற்றிய பொதுவான அறுதியுரைகளை வழங்குவதும், பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துவதுமே ஆகும் என்ற கருத்தும், பௌதீக அதீதத்தை மெய்யியலில் இருந்து நீக்குவதில் அவர் கொண்டிருந்த ஆர்வமும் தர்க்கப் புலனெறிவாத சிந்தனைகளின் அடிப்படைகளாயின.

தர்க்கப் புலனெறிவாதம் 20ம் நூற்றாண்டின் பிரதான மெய்யியல் போக்குகளில் ஒன்றாகும். தர்க்கப் புலனெறிவாதிகள் மெய்யியலைத் தூய்மை பெறச்செய்ய வேண்டும்; மெய்யியலைப் போலியான கொள்கைகளில் இருந்து வேறுபடுத்தி அதற்கு விஞ்ஞான வடிவத்தினை வழங்கி அதனைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்கள். சிந்தனைகள் பௌதீக அதீத கருத்துக்களையும், சிந்தனைகளையும் நிராகரிப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தன. அத்தகைய நோக்கத்திற்கு ரஸலினுடைய அளவையியல் மற்றும் பகுப்பாய்வு மெய்யியல் சார்ந்த சிந்தனைகளும், எழுத்துக்களும் மேலும் வலுச் சேர்ப்பதாக அமைந்தன.

**9. முடிவுரையும் பரிந்துரைகளும்:**

மெய்யியலின் வளர்ச்சிப் பாதையில் பேர்ட்டண்ட் ரஸலினுடைய பங்களிப்பு முக்கியமானதோர் இடத்தினை வகிக்கின்றது. அதிலும் குறிப்பாக கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான அவருடைய அணுகுமுறைகள் அக்காலகட்டத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தன. அதுமாத்திரமன்றி ரஸலினுடைய கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான அணுகுமுறைகளுக்கு ஆதரவாகவும், எதிராகவும் விமர்சன ஆய்வுகள் பல எழுந்துள்ள பொழுதிலும் பிற்பட்டகால குறிப்பாக சமகால மெய்யியல் வளர்ச்சியில் அவ் அணுகுமுறைகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. ரஸலினுடைய இவ் அணுகுமுறைகள் கடந்த நூற்றாண்டின் பகுப்பாய்வு மெய்யியல் சிந்தனைப் பள்ளிகள் குறிப்பாக தர்க்கப் புலனெறிவாதம் போன்ற பிற்பட்டகால மெய்யியல் சிந்தனைகளுக்கும், மேலும் பல்வேறு மெய்யியலாளர்களது சிந்தனைகளுக்கும் முன்னோட்டமான கருத்துக்களைக் கொண்டிருந்தன.இந்த வகையில் இவ் ஆய்வானது சமகால மெய்யியற் சிந்தனைப்பள்ளிகளினதும், மெய்யியலாளர்களினதும் சிந்தனைகளில் ரஸலினுடைய சிந்தனைகளின் செல்வாக்கினை மதிப்பீடு செய்யும் வகையிலான ஆய்வுகள் விரிவுபடுத்தப்பட வேண்டும் என பரிந்துரை செய்கின்றது.

**10. உசாத்துணைகள்:**


BAKHLE, S.W. (1987), Nature and Devlopment of Linguistic Analysis. Dattsons publishers: Nagpur.

DAS, KANTI LAL. (2006), Philosophical Relevance of Language. Nothern Book Centre: New Delhi.

EDWARDS PAUL. (1972), “Russell, Bertrand Arthur William” in The Encyclopedia of Philosophy vol 7&8, Macmillan publishing co.Inc & the free press: New York.

LIVINGSTON PAUL M. (2001), “Russellian and Wittgensteinian Atomism” in Philosophical Investigations. University of California: California.

RUSSELL BERTRAND. (2003), “Seems, Madam? Nay, it is” in Russell on Metaphysics: Selection of Writings, Mumford.S (ed), Routledge: London.

RUSSELL BERTRAND. (2010), The problems of Philosophy. Indo Europian Publishing: USA.

RUSSELL, BERTRAND. (1914), Our Knowledge of the External World. George Allen & Unwin: London.

STUMPF SAMUEL ENOCH. (1993), Elements of Philosophy: An Introduction. Mc Graw – Hill Inc: New York.

# அறிவாராட்சியியலில் நியாயவாதத்தினதும், அனுபவவாதத்தினதும் ஒருங்கிணைந்த பரிமாணம்: இமானுவெல் கான்டின் அறிவாராட்சியியல் - ஓர் பகுப்பாய்வு

**Sivakumar. Nirosan**

Assistant Lecturer, Dept of Philosophy, Faculty of Arts, University of Jaffna.
ssnirosan@yahoo.com

**ABSTRACT:** நவீன காலத்தில் நிலவிய அறிவாராட்சியலின் நியாயவாதம், அனுபவவாதம் எனும் இரு பெரும்பாரம்பரியங்களை கான்டினுடைய சிந்தனைகள் ஒருங்கிணைத்த தன்மையினையும், அவை சமகால மெய்யியலில் ஏற்படுத்திய தாக்கங்களையும் மதிப்பீடு செய்வதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது. உண்மை அறிவு எவ்வாறு எழுகின்றது எனும் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட ஒரு கொள்கைகள் (அறிவுமுதல் வாதம், அனுபவமுதல் வாதம்) நவீன கால தத்துவ உலகில் நிலவின. அறிவு முதல்வாதம் நியாயித்தலையும், அனுபவமுதல் வாதம் புலனனுபவத்தையும் பிறப்பிடமாகவும், அடிப்படையாகவும் கொண்டது எனலாம். இவ்விரு தத்துவங்களுமே குறைபாடுடையனவாய் காணப்பட்ட பொழுதிலும் இரண்டிலுமே உண்மைக் கூறுகளும் காணப்பட்டன. ஒன்றில் காணப்படும் உண்மைக்கூறு மற்றையதன் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் காணப்பட்டது. எனவே இவ்விரு தத்துவங்களையும் இணைத்து முழுமையான ஓர் தத்துவத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஜேர்மனிய தேசத்தைச் சேர்ந்த இமானுவெல் கான்ட் இப்பணியை முன்னெடுத்தார் (அவரது இப்பணியினை காலம், வெளி, தீர்ப்புக்கள் என்பன பற்றிய சிந்தனைகள் தெளிவாக வெளிப்படுத்தின). இது அறிவாராட்சியியல் வரலாற்றில் ஓர் திருப்புமுனையாக அமைந்தது.கான்டினுடைய சிந்தனைகள் ஐரோப்பா முழுவதும் தனது செல்வாக்கினை விஸ்தரித்துக் கொண்டது.19ம் நூற்றாண்டில் இமானுவெல் கான்டின் சிந்தனைகள் பெற்றிருந்த செல்வாக்கினைப் போல் வேறு எந்த சிந்தனைகளும் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. எனினும் பிற்பட்ட காலத்தில் கான்டினுடைய சிந்தனைகள் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டன. இதன் விளைவாக சமகால மெய்யியலில் கான்டினுடைய சிந்தனைகளை ஆதரிப்பதும் (கண்ட மெய்யியல்), விமர்சிப்பதுமான (பகுப்பாய்வு மெய்யியல்) இருபெரும் தத்துவப் பிரிவுகள் வளர்ச்சி பெற்றுள்ளன. இந்த வகையில் முன்னெழுந்த சிந்தனைகளின் சங்கமமாகவும், பின்னெழுந்த சிந்தனைகளின் ஊற்றாகவும் கான்டினது சிந்தனைகள் விளங்கின. இதனாலே தான் 'இமானுவெல் கான்ட் அவர்களின் தத்துவங்களை அறியாதோர், அவருக்குப் பின்னெழுந்த தத்துவங்களைப் புரிந்து கொள்ள இயலாது' என்றொரு கருத்து தத்துவ உலகில் நிலவுகின்றது. எனவே கான்டினுடைய சிந்தனைகளின் பரிமாணத்தையும், அவை பின்னெழுந்த சிந்தனைகளில் ஏற்படுத்திய தாக்கத்தினையும் பகுப்பாய்வு செய்வதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது. இவ் ஆய்விற்குத் தேவையான தரவுகள் கான்டினுடைய பிரதான நூல்கள், பருவ இதழ்களில் வெளியான கட்டுரைகள், இணையத்தளக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன. மேலும் இவ் ஆய்வானது விபரணமுறை, பகுப்பாய்வுமுறை, விமர்சனமுறை என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

**Keywords:-**நியாயவாதம், அனுபவவாதம், விமர்சன மெய்யியல், தீர்ப்புக்கள்

## 1. அறிமுகம்:

அறிவாராட்சியியலில் மையமாக அமையும். பிரச்சினை உண்மை அறிவு எவ்வாறு எழுகின்றது என்பதே ஆகும். இதற்கு நவீன காலத்தில் அறிவுமுதல் வாதம் (Rationalism), அனுபவமுதல் வாதம் (Empiricism) எனும் இரு வகையான விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன. அறிவுமுதல் வாதம் நியாயித்தல் அல்லது பகுத்தறியும் திறனால் மாத்திரமே சரியான அறிவைப் பெறமுடியும் என்றும், காரணப்படுத்திப் பார்க்கும் பகுப்பாய்வுக்கு உடன்படாத எதுவும் அறிவாகாது என்றும் விபரித்தது. அனுபவமுதல் வாதம் அறிவுமுதல் வாதத்திற்கு மாறாக அனுபவமே சரியான அறிவினைத் தரவல்லது என்றும், அனுபவ எல்லைக்கும், சோதனைக்கும் உட்படாத எதையும் அறிவாக ஏற்கமுடியாது என்றும் விபரித்தது. புலனுணர்ச்சிக் கொள்கையினர் அறிவுமுதல் வாதத்தில் காணப்பட்ட குறைபாடுகளை தெளிவாக சுட்டிக்காட்டினர். அவர்கள் உள்ளுறை எண்ணங்கள் புலனுக்குட்படாதவை என்றும் விளைவற்றது என்றும் குறிப்பிட்டனர். அத்தோடு அது எதனையும் செய்ய முடியாதாய் உள்ளது என்றும் குறிப்பிட்டனர். உள்ளுறை எண்ணங்கள் இருப்பது உண்மையாகவே இருப்பினும் அவை அனுபவத்திற்குப் பின்னரே வெளிப்படுகின்றன என்றனர். அத்தோடு உள்ளுறை எண்ணம் உண்டு எனின் நிறம் குறித்த அறிவு எல்லோரிடமும் இருந்தாக வேண்டும். ஆனால் பிறவியிலேயே பார்வையற்ற ஒருவனுக்கு அது குறித்த அறிவு இருப்பதில்லை. அத்தோடு அறிவுமுதல் வாதத்தினரின் கருத்துப்படி எல்லா அறிவும் பொதுமைக்குட்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால் கடவுள் குறித்த அறிவோ அல்லது ஒழுக்கம்

குறித்த அறிவோ பொதுமையானதாக இல்லை. எனவே அறிவைப் பெற நியாயவாதம் போதுமானதல்ல. மாறாக நியாயவாதிகளும் புலனுணர்ச்சிக் கொள்கையின் குறைபாடுகளை தெளிவுபடுத்தினர். அவர்கள் கணிதம் அளவையியல் போன்றன தரும் அறிவு நிச்சயமானது. அத்தகைய அறிவு எவ்வாறு புலன்வழி பெறப்பட முடியும். அது மாத்திரமன்றி மனிதனுடைய புலன்கள் வரையறைக்குட்பட்டவை. அவற்றினால் பெறப்படும் அறிவு நிச்சயத்தன்மை உடையவையாய் இல்லை. ஏனெனில் வரையறைக்குட்பட்ட புலன்கள் என்றும் ஏமாற்றத்தையே தரக்கூடியன என்றனர். இவ்வாறாக இரு தத்துவங்களுமே குறைபாடுடையனவாய் காணப்பட்ட பொழுதிலும் இரண்டிலுமே உண்மைக் கூறுகளும் காணப்பட்டன. ஒன்றில் காணப்படும் உண்மைக்கூறு மற்றையதன் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் காணப்பட்டது. எனவே இவ்விரு தத்துவங்களையும் இணைத்து முழுமையான ஓர் தத்துவத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஜேர்மனிய தேசத்தைச் சேர்ந்த இமானுவெல் கான்ட் இப் பணியை முன்னெடுத்தார். இந்த வகையிலேயே நாம் இமானுவெல் கான்ட் அறிவாராட்சியியலுக்கு ஆற்றிய பங்களிப்பினை கண்டுகொள்ள முடிகின்றது.

## 2. ஆய்வின் கருதுகோள்:

முன்னெழுந்த சிந்தனைகளின் சங்கமமாகவும், பின்னெழுந்த சிந்தனைகளின் ஊற்றாகவும் கான்டினது சிந்தனைகள் விளங்கின.

## 3. ஆய்வு முறையியல்:

இவ் ஆய்விற்குத் தேவையான தரவுகள் கான்டினுடைய பிரதான நூல்கள், பருவ இதழ்களில் வெளியான கட்டுரைகள், இணையத்தளக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன. மேலும் இவ் ஆய்வானது விபரணமுறை, பகுப்பாய்வுமுறை, விமர்சனமுறை என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

## 4. பகுப்பாய்வு:

அறிவாராட்சியியலில் மையமாக அமையும். பிரச்சினை உண்மை அறிவு எவ்வாறு எழுகின்றது என்பதே ஆகும். இதற்கு நவீன காலத்தில் அறிவுமுதல் வாதம் (Rationalism), அனுபவ வாதம் (Empiricism) என இரு வகையான விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன. அறிவுமுதல் வாதம் நியாயித்தல் அல்லது பகுத்தறியும் திறனால் மாத்திரமே சரியான அறிவைப் பெறமுடியும் என்றும், காரணப்படுத்திப் பார்க்கும் பகுப்பாய்வுக்கு உடன்படாத எதுவும் அறிவாகாது என்றும் விபரித்தது. அனுபவமுதல் வாதம் அறிவுமுதல் வாதத்திற்கு மாறாக அனுபவமே சரியான அறிவினைத் தரவல்லது என்றும், அனுபவ எல்லைக்கும், சோதனைக்கும் உட்படாத எதையும் அறிவாக ஏற்கமுடியாது என்றும் விபரித்தது. இவ்விரு தத்துவங்களும் வேறுபட்டவை மட்டுமல்ல, முரண்பட்டவையும் ஆகும். எனினும் இவ்விரு தத்துவங்களும் ஒன்றை ஒன்று முற்றாக விலக்கவில்லை என்றே கூறவேண்டும். ரேனே டேக்காட், ஸ்பினோசா, லைபினிஸ்ட் போன்றோர் நியாயவாதத்தின் முன்னோடிகளாவர். ஜோன் லொக், பாக்ளி, டேவிட்கியூம் போன்றோர் அனுபவ வாதத்தின் முன்னோடிகளாவர். இவர்கள் தாம் ஏற்றுக் கொண்ட கொள்கைகள் முறையானவையே என்று விளக்குவதோடு மட்டுமன்றி தமக்கு எதிரான கொள்கைகளின் குறைபாடுகளை விளக்கவும் முற்பட்டனர். இதன் விளைவாக இவ்விரு கொள்கைகளிலும் காணப்பட்ட குறைபாடுகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டன.

புலனுணர்ச்சிக் கொள்கையினர் அறிவுமுதல் வாதத்தில் காணப்பட்ட குறைபாடுகளை தெளிவாக சுட்டிக்காட்டினர். அவர்கள் உள்ளுறை எண்ணங்கள் புலனுக்குட்படாதவை என்றும் விளைவற்றது என்றும் குறிப்பிட்டனர். அத்தோடு அது எதனையும் செய்ய முடியாதாய் உள்ளது என்றும் குறிப்பிட்டனர். உள்ளுறை எண்ணங்கள் இருப்பது உண்மையாகவே இருப்பினும் அவை அனுபவத்திற்குப் பின்னரே வெளிப்படுகின்றன என்றனர். அத்தோடு உள்ளுறை எண்ணம் உண்டு எனின் நிறம் குறித்த அறிவு எல்லோரிடமும் இருந்தாக வேண்டும். ஆனால் பிறவியிலேயே பார்வையற்ற ஒருவனுக்கு அது குறித்த அறிவு இருப்பதில்லை. அத்தோடு அறிவுமுதல் வாதத்தினரின் கருத்துப்படி எல்லா அறிவும் பொதுமைக்குட்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால் கடவுள் குறித்த அறிவோ அல்லது ஒழுக்கம் குறித்த அறிவோ பொதுமையானதாக இல்லை. எனவே அறிவைப் பெற நியாயவாதம் போதுமானதல்ல. மாறாக நியாயவாதிகளும் புலனுணர்ச்சிக் கொள்கையின் குறைபாடுகளை தெளிவுபடுத்தினர். அவர்கள் கணிதம் அளவையியல் போன்றன தரும் அறிவு நிச்சயமானது. அத்தகைய அறிவு எவ்வாறு புலன்வழி பெறப்பட முடியும். அது மாத்திரமன்றி மனிதனுடைய புலன்கள் வரையறைக்குட்பட்டவை. அவற்றினால் பெறப்படும் அறிவு

நிச்சயத்தன்மை உடையவையாய் இல்லை. ஏனெனில் வரையறைக்குட்பட்ட புலன்கள் என்றும் ஏமாற்றத்தையே தரக்கூடியன என்றனர்.

இவ்வாறாக இரு தத்துவங்களுமே குறைபாடுடையனவாய் காணப்பட்ட பொழுதிலும் இரண்டிலுமே உண்மைக் கூறுகளும் காணப்பட்டன. ஒன்றில் காணப்படும் உண்மைக்கூறு மற்றையதன் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் காணப்பட்டது. எனவே இவ்விரு தத்துவங்களையும் இணைத்து முழுமையான ஓர் தத்துவத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஜேர்மனிய தேசத்தைச் சேர்ந்த இமானுவெல் கான்ட் இப் பணியை முன்னெடுத்தார்.

இமானவெல் கான்ட் அறிவியல் சாத்தியமானது ஆனால் பௌதீக அதீதம் சாத்தியமற்றது எனும் கருத்தினை தெளிவாக நிலைநாட்ட விரும்பினார். அறிவியலை எது சாத்தியமாக்கியது என்பது அவருடைய முன்னோர்களால் புரிந்துகொள்ளப்படவில்லை என்கின்றார். அவர்கள் அறிவின் தோற்றுவாய் நியாயவாதமா? அனுபவவாதமா? எனும் முரண்பாட்டில் சிக்கிக் கொண்டனர். நியாயித்தலினதும், அனுபவத்தினதும் இணைவினாலேயே அறிவு பெறப்படுகின்றது என்பதனை கான்ட் நிறுவ முயன்றார். 'பகுத்தறிவில்லா அனுபவம் குருட்டுத்தனமானது அல்லது நோக்கற்றது என்றும், அனுபவமில்லா பகுத்தறிவு உள்ளீடற்றது அல்லது வெறுமையானது என்றும்' கான்ட் குறிப்பிடுகின்றார். கான்டினுடைய இந்த சிந்தனை மூன்று கட்டங்களைக் கொண்ட வளர்ச்சிப் போக்கினை உடையது. ஆரம்பத்தில் கான்ட் நியாயவாதக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டிருந்தார். இது அவரது அறிவாராட்சியியலின் முதலாவது கட்டம். நியாய வாதத்தில் குறைபாடுகளைக் கண்டுகொண்ட கான்ட் பின் அனுபவவாதக் கருத்துக்களை ஆதரிக்கத் தொடங்கினார். காலப்போக்கில் அனுபவமுதல் வாதத்திலும் குறைபாடுகளைக் கண்டுகொள்ளத் தொடங்கினார். இதனால் அவரது அறிவாராட்சியியல் சிந்தனைகளின் மீண்டும் ஓர் திருப்பம் ஏற்பட்டது. இந்த மூன்றாவது காலகட்டமே கான்டினது அறிவாராட்சியியலில் இன்றியமையாததும், முக்கியமானதுமான காலகட்டம் ஆகும். நியாயவாதத்திலும், அனுபவவாதத்திலும் குறைபாடுகளைக் கண்ட கான்ட் அவற்றில் சில உண்மைக் கூறுகளையும் கண்டார்.

எனவே 1770 இல் ஆரம்பமான இக்காலகட்டத்தின் உச்சநிலையாக 1781ல் நியாயவாதத்தையும், அனுபவவாதத்தையும் ஒன்றாக இணைப்பது (Synthesis of Rationalism and Empiricism) என்ற எண்ணம் அவரது மனதில் உதயமானது. அவ்வாறு இணைத்துப் பெறப்பட்ட முறையை 'விமர்சன மெய்யியல்' (Critical Philosophy) என வழங்கினார். தன்னுடைய இந்த சிந்தனையை அவர் தனது 'தூய அறிவின் விமர்சனம்' (Critique of Pure Reason) என்ற நூலில் தெளிவாக வெளிப்படுத்தினார். ("Kant's magnum opus, 'The Critique of Pure Reason', aimed to unite reason with experience") இந்நூலானது தனிமங்கள் பற்றிய கொள்கை (Doctrine of Elements), முறை பற்றிய கொள்கை (Doctrine of Method) எனும் இரு பிரதான பகுதிகளைக் கொண்டது. தனிமங்கள் பற்றிய கொள்கை புலன், அளவையியல் எனும் இரு பகுதிகளைக் கொண்டது. அதில் அளவையியல் பகுப்பியல் (Analytic), முரணாய்வு (Dialectic) எனும் இரு பகுதிகளைக் கொண்டது. இவற்றுள் புலன், பகுப்பியல், முரணாய்வு எனும் மூன்றும் முக்கியமான பகுதிகளாக காணப்படுகின்றன. மேற்குறித்த மூன்று பகுதிகளையும் முத்துமோகன் தன்னுடைய ஐரோப்பிய தத்துவங்கள் என்ற நூலில் முறையே நிகழ்வியல், பகுத்தறிவு, இயங்கியல் என்றவாறாக குறிப்பிடுகின்றார்.

எல்லா அறிவுமே புலன்களிலிருந்து தொடங்குகின்றன. புற உலகிலுள்ள பொருட்களுடன் புலன்கள் பொருந்தும் பொழுது அனுபவம் கிடைக்கப் பெறுகின்றது. இதுவே மனிதனுக்குக் கிடைக்கும் முதல் மூல அறிவு. எனினும் புலன்கள் மட்டுமே அறிவுக்கு ஆதாரம் என்று நினைத்துவிட முடியாது. புலன் வழியாகக் கிடைக்கும் அறிவு பலவகையானது. (ஒலி, ஒளி, சுவை, நாற்றம், உணர்வு). தனித்தனியாக தான்தோன்றித் தனமாக கிடைக்கும் தகவல்களை ஒன்றிணைப்பது எது? கட்டமைப்பது எது? பொதுமைப்படுத்துவது எது? ஒழுங்கமைப்பது எது? தொகுப்பது எது? அதுவே பகுத்தறிவு.

எனவே கான்ட் புலன் எனும் பகுதியினூடாக தன்னுடைய கடந்தநிலை முறையை (விமர்சன முறையை) அதாவது புலனனுபவமும், பகுத்தறிவும் இணைக்கப்படும் தன்மையை விளக்கிச் செல்கின்றார். இதில் அவர் காலம் இடம் எனும் இரு விடயங்களைப் பற்றிப் பேசுகின்றார். ஒரு பொருளைப் பற்றி தனித்தனியாக நமக்குக் கிடைக்கும் புலனுணர்வுத் தகவல்களை ஒருங்கிணைக்கும் இரண்டு வடிவங்கள் நமது மனதில் உள்ளன. எனவே எந்தச் செய்தியை